**MLWA HSS Madurai (Run by Jain Educational & Empowerment Trust)**

**+1 Acc Model Qly**

Date : 12-Sep-22

11th Standard

கணக்குப்பதிவியல்

Reg.No. :

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Exam Time : 03:00:00 Hrs

Total Marks : 90

**பகுதி - அ சரியான விடையை தேர்ந்தெடு** 14 x 1 = 14

1) நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
(a) சமூகக் கணக்கியல் (b) காரியதரிசிகளின் கணக்கியல் (c) மேலாண்மைக் கணக்கியல்
(d) பொறுப்பு கணக்கியல்

2) வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து
(a) பண மதிப்பீட்டுக் கருத்து (b) அடக்கவிலை கருத்து (c) வணிகத்தனித்தன்மை கருத்து
(d) இரட்டைத்தன்மை கருத்து

3) GAAP என்பது:
(a) பொதுவாக ஏற்றுக் கொள்ளடப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
(b) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
(c) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள் (d) இவற்றுள் ஏதுமில்லை

4) ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ 1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ 60,000 எனில், அந்நிறுவனத்தில் முதல்__________
(a) ரூ 1,60,000 (b) ரூ 60,000 (c) ரூ 1,00,000 (d) ரூ 40,000

5) கு.ப.எ. என்பது
(a) பேரேட்டு பக்க எண் (b) குறிப்பேட்டு பக்க எண் (c) சான்று சீட்டு எண் (d) ஆணை எண்

6) உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
(a) ரொக்க கணக்கு (b) எடுப்புக் கணக்கு (c) முதல் கணக்கு (d) அனாமத்து கணக்கு

7) இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும் வரவுப்பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு
(a) வியாபாராபார கணக்கு (b) வே வேறுபாட்டு கணக்கு (c) அனாமத்து கணக்கு (d) இதர கணக்கு

8) ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
(a) ஆண்டு இறுதியில் (b) ஒரு குறிப்பிட்ட நாளில் (c) ஒரு பருவ காலம் முடிந்தது (d) இவை ஏதும் இல்லை

9) விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது?
(a) அனைத்து சரக்குகளின் விற்பனை (b) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை
(c) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை (d) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

10) கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது
(a) சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமெறாமல் திருப்பிய சரக்கு
(b) அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சொத்துகள்
(c) உடனடியாக பணம் பெற்றுக் கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது (d) மேற்கண்டஏதுமில்லை

11) ரொக்க ஏடு பதிவு செய்வது
(a) அனைத்து ரொக்கப் பெறுதல்கள் (b) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள் (c) (அ), (ஆ) ஆகிய இரண்டும்
(d) அனைத்து கடன் நடவடிக்கைகள்

12) கீழ்க்கண்டவற்றில் எது எதிர்ப்பதிவாக பதிவு செய்யப்படும்?
(a) சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
(b) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
(c) வாடிக்கையாளர், நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை
(d) வங்கி எடுத்துக் கொண்ட வட்டி

13) வங்கிச்சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
(a) வங்கி அறிக்கை (b) ரொக்க ஏடு (c) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி
(d) சில்லறை ரொக்க ஏடு

14) பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?
(a) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது
(b) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது
(c) வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை (d) ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்த

**பகுதி - அ - பொருத்துக** 1 x 1 = 1

15)

| | |
|---|---|
| a) இடாப்பு | (1) உள்திருப்பத்திற்கான ஆதார ஆவணம் |
| b) வியாபாரத் தள்ளுபடி | (2) வெளித்திருப்பத்திற்கான ஆதார ஆவணம் |
| c) பற்றுக் குறிப்பு | (3) கொள்முதல் ஏடு |
| d) வரவுக் குறிப்பு | (4) இரசீது |

**பகுதி - அ - கூற்று மற்றும் காரணம்** 1 x 1 = 1

16) **கூற்று (A):** இருப்பாய்வு என்பது ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும்.
**காரணம் (R):** இது கணக்கேடுகளில் உள்ள பதிவுகளின் கணக்கீட்டு சரித்தன்மையை அறியும் நோக்கத்துடனும், மற்றும் நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கு உதவுவதற்காகவும் தயாரிக்கப்படுகிறது.
(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

(ஆ) (A) மற்றும் (A) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
(இ) (A) சரி ஆனால் (R) தவறு
(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

**பகுதி - அ - பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு** 1 x 1 = 1

17) (அ) வங்கியர்
(ஆ) எழுதுநர்
(இ) ஏற்குநர்
(ஈ) செலுத்தப் பெறுநர்

**பகுதி - அ - பொருத்தமான இணையை காண்க** 1 x 1 = 1

18) கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்துகிறது?
அ. கொள்முதல் திருப்பம் - உள்திருப்பம்
ஆ. விற்பனை திருப்பம் - வெளித்திருப்பம்
இ. மாற்றுச் சீட்டு - எழுத்து வடிவிலான ஆவணம்
ஈ. சலுகை நாட்கள் - நான்கு நாட்கள்

**பகுதி - அ - பொருத்தமற்ற இணையை காண்க** 1 x 1 = 1

19) கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?
(அ) குறிப்பேடு - பேரேட்டுப் பக்க எண்
(ஆ) பேரேடு - குறிப்பேட்டு பக்க எண்
(இ) கொள்முதல் ஏடு - இடாப்பு எண்
(ஈ) விற்பனை திருப்ப ஏடு - பற்று குறிப்பு எண்

**பகுதி - அ - சரியான வாக்கியத்தை காண்க** 1 x 1 = 1

20) (I) ரொக்க எட்டின் படி பற்றியிருப்பு சாதகமான இருப்பாகும்.
(II) ரொக்க ஏட்டில் வங்கிப்பத்தியின் வரவிருப்பு என்பது மேல்வரைப் பற்று ஆகும்.
(III) வங்கி சரிகட்டும் பட்டியல் வணிகத்தால் தயாரிக்கப்படுகிறது.
(அ) I மட்டும் சரி
(ஆ) II மட்டும் சரி
(இ) I மற்றும் III சரி
(ஈ) I, II மற்றும் III சரி

**பகுதி - ஆ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாய வினா** 7 x 2 = 14

21) கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு

22) விடுபட்ட பகுதிகளை நிரப்புக:

| | சொத்துக்கள் ரூ= | பொறுப்புகள் ரூ= | முதல் ரூ |
|---|---|---|---|
| (அ) | 30,000 | 20,000 | ? |
| (ஆ) | 60,000 | 25,000 | ? |
| (இ) | ? | 25,000 | 30,000 |
| (ஈ) | ? | 10,000 | 80,000 |
| (உ) | 25,000 | ? | 15,000 |
| (ஊ) | 40,000 | ? | 30,000 |

23) பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.

| | | |
|---|---|---|
| 2016 ஜன 1 | கையில் உள்ள அறைகலன் | ரூ.2,000 |
| 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4,000 |
| 30 | அறைகலன் விற்றது | 400 |

24) கீழ்க்காணும் கணக்குகளில் தோன்றும் இருப்புகளைக் குறிப்பிடுக.
அ.ரொக்கம், ஆ. கடனீந்தோர், இ. விற்பனை, ஈ. அறைகலன், உ. கழிவு பெற்றது, ஊ. கடனாளி, எ. கொள்முதல், ஏ. முதல், ஐ. ஊதியம் வழங்கியது, ஒ. கணினி

25) இருப்பாய்வு என்றால் என்ன?

26) கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக:
(i) வெளித்தூக்குக்கூலி
(ii) உள்தூக்கு கூலி
(iii) விற்பனை
(iv) கொள்முதல்
(v) வாராக்கடன்
(vi) வட்டிச் செலுத்தியது
(vii) வட்டிப் பெற்றது
(viii) தள்ளுபடிப் பெற்றது
(ix) முதல்
(x) எடுப்புகள்
(xi) விற்பனைத்திருப்பம்
(xii) கொள்முதல் திருப்பம்

27) ஏதேனும் நான்கு துணைஏடுகளின் வகைகளைக் குறிப்பிடுக.

28) இருபத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

29) வியாபாரத் தள்ளுபடி என்றால் என்ன?

30) வங்கி மேல்வரைப்பற்று என்றால் என்ன?

**பகுதி - இ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாய வினா** 7 x 3 = 21

31) கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்? (அ) முதலீட்டாளர்கள் (ஆ) அரசு

32) ஆள்சார் கணக்கின் மூன்று வகைகளைக் கூறுக.

33) 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.

| சொத்துகள்: | ரூ |
|---|---|
| ரொக்கம் | 40,000 |
| சரக்கிருப்பு | 50,000 |
| ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது | 20,000 |
| இயந்திரம் | 40,000 |
| பொறுப்புகள்: | |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

| சொத்துகள்: | ரூ |
|---|---|
| விஜய் என்பவருக்கு செலுத்த வேண்டியது | 10,000 |

தொடக்கப் பதிவினைத் தந்து வினோத்தின் முதல் கணக்கில் எடுத்து எழுதவும்.

34) கீழ்க்கண்ட இருப்பாய்வில் சில பிழைகள் உள்ளன. அவற்றைவற்றை சரிசெய்து மீண்டும் ஒரு இருப்பாய்வைத் தயாரிக்கவும்.

31-03-2017 -ஆம் நாளைய இருப்பாய்வு

| கணக்கின் பெயர் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| கட்டடம் | 60,000 | |
| இயந்திரம் | 17,000 | |
| கொள்முதல் திருப்பம் | 2,600 | |
| வாராக்கடன் | 2,000 | |
| ரொக்கம் | 400 | |
| பெற்றெற்றத் தள்ளுபடி | 3,000 | |
| வங்கி மேல்வரைப்பற்று | 10,000 | |
| கடனீந்தோர் | 50,000 | |
| கொள்முதல் | 1,00,000 | |
| முதல் | | 72,800 |
| பொருத்துகைகள் | | 5,600 |
| விற்பனை | | 1,04,000 |
| கடனாளிகள் | | 60,000 |
| வட்டி பெற்றெற்றது | | 2,600 |
| மொத்தம் | 2,45,000 | 2,45,000 |

35) பின் வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.
(அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது
(ஆ) கடனுக்கு சரக்கு விற்றது
(இ) கடனுக்கு சரக்கு வாங்கியது
(ஈ) உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது.
(உ) சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு.
(ஊ) கடனுக்கு சொத்துகள் வாங்கியது

36) சிறு குறிப்பு வரைக
(அ) மாற்றுச்சீட்டில் மேலெழுதுதல்
(ஆ) மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்

37) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

38) பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| 2017 ஜன | | ரூ |
|---|---|---|
| 1 | கை இருப்பு ரொக்கம் | 11,200 |
| 5 | இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது | 300 |
| 7 | வாடகை செலுத்தியது | 30 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது | 300 |
| 10 | மோகனுக்கு செலுத்தியது | 700 |
| 27 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 200 |
| 31 | சம்பளம் கொடுத்தது | 100 |

39) பின்வரும் தகவல்களிலிருந்து டிசம்பர் 31, 2017-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க:
(அ) வங்கி அறிக்கையின் படி இருப்பு ரூ 25,000.
(ஆ) மறுக்கப்பட்ட காசோலை ரூ 250 குறித்து ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.
(இ) வங்கியில் செலுத்திய காசோலை தொகை ரூ 3,500 இன்னும் வசூலிக்கப்படவில்லை.
(ஈ) வங்கிக் கட்டணம் ரூ 300 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.
(உ) விடுத்த காசோலை ரூ 9,000 செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை.

40) கீழ்க்காணும் தகவல்கலிருந்து திரு.உதயக்குமார் அவர்களின் வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயாரிக்க .

| | |
|---|---|
| ரொக்க ஏட்டின் இருப்பு | ரூ,15,000 |
| வங்கியில் செலுத்தியும் வசூலாகாதவை | ரூ. 1,000 |
| அளித்த காசோலைகள் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதவை | ரூ. 1,500 |
| வங்கி அளித்த வட்டி | ரூ . 200 |

**பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டு விளைவுகளை பதிவிட்டு காட்டுக.
(அ) இராஜ் ரூ 40,000 ரொக்கத்துடன் வணிகத்தைத் தொடங்கினார் .
(ஆ) ரூ 30,000 வைப்புத் தொகையுடன் வங்கியில் கணக்கினை ஆரம்பித்தார் .
(இ) ஹரி என்பவரிடமிருந்து ரூ 12,000க்கு கடனுக்கு சரக்கு வாங்கப்பட்டது.
(ஈ) இராஜ் தமது சொந்த பயன்பாட்டிற்காக ரூ 1,000 எடுத்துக்கொண்டார் .
(உ) பற்று அட்டையினைப் பயன்படுத்தி ரூ 10,000-க்கு அறைகலன்கள் வாங்கப்பட்ட து.
(ஊ) முருகன் என்பவருக்கு சரக்கு விற்பனை செய்யப்பட் டு, ரூ 6,000 பெறப்பட்டது.
(எ) அலுவலகத் தேவைக்காக வங்கியிலிருந்து பணம் எடுக்கப்பட்டது ரூ 1,000.

**(OR)**

b) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2017 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க.
2017
ஏப்ரல் 1 காஞ்சிபுரம் பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வங்கியது
ஒரு மீட்டர் ரூ. 450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ரூ. 180 வீதம் 75 மீட்டர் வெல்வெவெல்வெட்துணி
ஏப்ரல் 10 சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது
ஒரு மீட்டர் ரூ. 490 வீதம் 60 மீட்டர் சில்க்துணி
ஒரு மீட்டர் ரூ. 210 விதம் 50 மீட்டர் வெல்வெவெல்வெட்துணி
ஏப்ரல் 18 நாதன் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

ஒரு மீட்டர் ரூ. 510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி

ஏப்ரல் 20 மதுரை, ஹரிராம் துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது

கட்டு ஒன்று ரூ. 730 வீதம் 50 கட்டுகள் காடாத் துணி

கட்டு ஒன்று ரூ. 650 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி

ஏப்ரல் 24 கரூர், மோகனிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது

சட்டைத்துணிகள் மதிப்பு ரூ. 7,000

சேலைகள் மதிப்பு ரூ. 25,000

42) a) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

| 2018 மார்ச் | | ரூ |
|---|---|---|
| 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| 6 | கமலே சிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| 8 | ரொகத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| 18 | வாடகை செலுத்தியது | 500 |
| 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| 28 | சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

**(OR)**

b) பின்வரும் இருப்பாய்வினை சரி செய்யவும்.

| விவரம் | பற்று இருப்புகள் ரூ | வரவு இருப்புகள் ரூ |
|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,00,000 | |
| சம்பளம் | 36,000 | |
| கடனீந்தோர் | 1,32,000 | |
| வங்கி | 35,000 | |
| உள் ஏற்றிச் செல் செலவு | 18,000 | |
| பெற்ற வாடகை | 9,000 | |
| அளித்த தள்ளுபடி | 6,000 | |
| கொள்முதல் | 3,48,000 | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | |
| கடனாளிகள் | | 45,000 |
| வெளித்தூக்குக் கூலி | | 15,000 |
| முதல் | | 1,63,000 |
| உள் திருப்பம் | | 9,000 |
| பெற்ற தள்ளுபடி | | 12,000 |
| வியாபாரச் செலவுகள் | | 18,000 |
| விற்பனை | | 3,68,000 |
| கட்டடம் | | 1,14,000 |
| மொத்தம் | 7,44,000 | 7,44,000 |

43) a) தீபக் எழுதுபொருள் நிறுவனத்தின் நடவடிக்கைகள் 2018 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பின்வருமாறு இருந்தன. அவைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

| ஜனவரி | | ரூ |
|---|---|---|
| 1 | றோக்கத்துடன் வியாபாரம் தொடங்கியது | 2,00,000 |
| 2 | வங்கியில் கணக்கு ஆரம்பித்து, பணம் செலுத்தியது | 1,00,000 |
| 3 | பத்மினி நிறுவனத்திற்கு A4 தாள்களை கடனுக்கு விற்பனைச் செய்தது | 60,000 |
| 4 | பத்மினி நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட தொகைக்கு பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு பெறப்பட்டது | |
| 5 | பத்மினி நிறுவனத்தின் மாற்றுச்சீட் டு வங்கியில் கொடுத்து தள்ளுபடி செய்து பணம் பெறப்பட்டது | 58,000 |
| பிப்ரவரி | | |
| 15 | பத்மினி நிறுவனத்தின் மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | |

**(OR)**

b) கல்யாண சுந்தரம் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| 2017 ஜன. | | ரூ |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 42,500 |
| | வங்கி இருப்பு | 35,000 |
| 3 | ரொக்க விற்பனை மூலம் பெற்ற தொகை | 15,700 |
| 4 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 11,500 |
| 6 | ரொக்கக் கொள்முதல் | 14,300 |
| 9 | மின்னணு தீர்வை முறையில் வங்கி நேரடியாக பங்காபங்காதாயம் பெற்றது | 2,000 |
| 10 | பொங்கல் முன்பணம் பணியாளர்களுக்கு வங்கி மூலம் செலுத்தியது | 17,000 |
| 12 | நாகராஜனிடமிருந்து ரொக்கம் பெற்றது | 11,850 |
| | அவருக்கு அளித்த தள்ளுபடி | 150 |
| 17 | மகேஷுக்கு கொடுக்க வேண்டிய ரூ 20,000 - த்தில் ரூ 19,700 செலுத்தி அவர் கணக்கு தீர்க்கப்பட்டது | |
| 20 | சொந்த செலவுகளுக்காகப் பணம் எடுத்துக் கொண்டது | 20,000 |
| 30 | தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தின் மூலம் அலுவலக செலவுகளுக்காகப் பணம் எடுத்தது | 1,500 |

44) a) பின்வரும் தொடக்கப்பதிவினைக் கொண்டு ஜாய் என்பவரின் ஏடுகளில் முக்கிய பேரேட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

ஜாய் என்பவரின் ஏடுகளில் குறிப்பேட்டுப்பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| 2017 ஜூன் 1 | ரொக்கக் க/கு. ப | | 45,000 | |
| | சரக்கிருப்பு க/கு ப | | 50,000 | |
| | சோகன் க/கு ப | | 35,000 | |
| | அறைகலன் க/கு ப | | 50,000 | |
| | ராம் க/கு | | | 20,000 |
| | ஜாய் முதல் க/க (சென்ற ஆண்டின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் கணக்கில் கொண்டுவரப்பட்டது) | | | 1,60,000 |

**(OR)**

b) பின்வரும் தகவல்களிலிருந்து முன் பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 ஜன | | ரூ |
|---|---|---|
| 1 | சில்லறைச் செலவுகளுக்காக ரொக்கம் பெற்றபெற்றது | 500 |
| 2 | பயணச்செலவுக்கு கொடுத்தது | 5 |
| | வண்டிக் கட்டணட்டணம் கொடுத்தது | 12 |
| 3 | தபால் செலவு செய்தது | 15 |
| | தற்காலிக வேலைவேலையாட்களுக்கு கூலி கொடுத்தது | 66 |
| 4 | எழுது பொருள் வாங்கியது | 134 |
| | போக்குவரத்துச் செலவுக்கு கொடுத்தது | 18 |
| 5 | பழுதுபார்ப்புச் செலவு செய்தது | 65 |
| | பேருந்துக் கட்டணட்டணம் செலுத்தியது | 11 |
| | வண்டிக் கட்டணட்டணம் கொடுத்தது | 24 |

45) a) பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

| | | |
|---|---|---|
| 2016 ஜன 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ரூ.10,000 |
| 5 | வங்கியில் செலுத்தியது | ரூ.5,000 |
| 7 | ராம் என்பவரிடமிருந்து சரக்குகளை ரொக்கத்திற்கு வாங்கியது | ரூ.1,000 |

**(OR)**

b) பின்வரும் விவரங்களிலிருந்து குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.

(அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு ரூ.7,130

(ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ரூ.1,000

(இ) வாடிக்கையாளர் நேரநேரடியாக வங்கியில் செலுத்தியது ரூ.800

46) a) பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | ரூ | கணக்கின் பெயர் | ரூ |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,00,000 | விற்பனை | 1,50,000 |
| வங்கிக் கடன் | 75,000 | கடனீந்தோர் | 50,000 |
| கடனாளி | 1,50,000 | ரொக்கம் | 90,000 |
| சரக்கிருப்பு | 35,000 | முதல் | 1,00,000 |

**(OR)**

b) கீழ்க்காணும் நடவடிக்கைகளை அகமது என்பவரின் ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| 2017 அக் | | ரூ |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 37,500 |
| 3 | ரொக்க விற்பனை | 33,000 |
| 7 | வேலனுக்கு செசெலுத்திய ரொக்கம்ரூ 15,850 அவர் அனுமதித்த தள்ளுபடி | 150 |
| 13 | பெருமாள் என்பன்பவருக்கு கடனுக்கு விற்ற சரக்கு | 19,200 |
| 15 | சொந்த செலவுகளுக்காகப் பணம் எடுத்தது | 4,800 |
| 16 | சுப்பிரமணியனிடமிருந்து சரக்குகள் கடனுக்கு வாங்கியது | 14,300 |
| 22 | ரொக்கம் வங்கியில் செலுத்தியது | 22,700 |
| 25 | பெருமாளிடம் ரொக்கம் பெற்று அவர் கணக்கைத் தீர்த்துக் கொண்டது | 19,000 |
| 26 | அலுவலக செலவிற்காக காசோலை மூலம் ரொக்கம் எடுத்தது | 17,500 |
| 27 | கோபால கிருஷ்ணனுக்கு ரொக்கம் செலுத்தியது | 2,950 |
| | அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி | 50 |
| 28 | சுப்பிரமணியனுக்கு ரொக்கம் செலுத்தி அவர் கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது | 14,200 |
| 29 | ரொக்கக் கொள்முதல் | 13,500 |
| 30 | விளம்பரச் செலவுகளுக்காக ரொக்கம் செலுத்தியது | 1,500 |

47) a) பின்வரும் நடவடிக்கைகளை மின்சாதனங்களை விற்பனைச் செய்யும் சுபஸ்ரீ மின் பொருள் நிறுவனத்தின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.

| | |
|---|---|
| 2017 ஏப்ரல் 5 | கார்த்திக் மின் பொருள் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது.<br>10 மின் தேய்ப்பான் ஒன்று ரூ.2,500 வீதம்<br>5 மின்சார அடுப்புகள் ஒன்று ரூ.2,000 வீதம் |
| ஏப்ரல் 19 | கேதான் மின் பொருளகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது<br>3 மின்சார நீர்சூடேற்றி ஒன்று ரூ.6,000 வீதம் |
| ஏப்ரல் 25 | போலார் மின் பொருள் விற்பனையகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது<br>10 மின் விசிறிகள் ஒன்று ரூ.2,000 வீதம் |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

ஏப்ரல் 29 M நிறுவனத்திடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது.
10 மின்சார அடுப்புகள் ஒன்று ரூ.3,000 வீதம்

**(OR)**

b) 2017, மே மாதத்திற்காற்கான சேஷாத்ரி அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| மே | | ரூ |
|---|---|---|
| 1 | கையிருப்பு ரொக்கம் | 40,000 |
| 5 | ஸ்வாதியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,000 |
| 7 | கூலி ரொக்கமாக கொடுத்தது | 2,000 |
| 10 | சசிகலாவிடமிருந்து ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 6,000 |
| 15 | ரொக்கத்திற்கு விற்பனை செய்த | 9,000 |
| 18 | கணிப்பொறி வாங்கியது | 15,000 |
| 22 | சபாபதிக்கு ரொக்கம் செலுத்தியது | 5,000 |
| 28 | சம்பளம் கொடுத்தது | 2,500 |
| 30 | வட்டிப் பெற்றது | 500 |

**கனவுகள் வெற்றி பெற வேண்டுமானால் முதலில் உள்ளத்தில் நம்பிக்கையை விதைக்க வேண்டும்..!**

*******************************************


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# MLWA HSS Madurai (Run by Jain Educational & Empowerment Trust)

**+1 Acc Model Qly**

Date : 11-Sep-22

11th Standard

Reg.No. :

## கணக்குப்பதிவியல்

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Time : 03:00:00 Hrs

Total Marks : 90

**பகுதி - அ சரியான விடையை தேர்ந்தெடு** 14 x 1 = 14

1) (b) காரியதரிசிகளின் கணக்கியல்
2) (c) வணிகத்தனித்தன்மை கருத்து
3) (b) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
4) (d) ரூ 40,000
5) (b) குறிப்பேட்டு பக்க எண்
6) (c) முதல் கணக்கு
7) (c) அனாமத்து கணக்கு
8) (b) ஒரு குறிப்பிட்ட நாளில்
9) (c) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை
10) (a) சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமெறாமல் திருப்பிய சரக்கு
11) (c) (அ), (ஆ) ஆகிய இரண்டும்
12) (b) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
13) (c) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி
14) (d) ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்த

**பகுதி - அ - பொருத்துக** 1 x 1 = 1

15) a)
இரசீது
b)
கொள்முதல் ஏடு
c)
வெளித்திருப்பத்திற்கான ஆதார ஆவணம்
d)
உள்திருப்பத்திற்கான ஆதார ஆவணம்

**பகுதி - அ - கூற்று மற்றும் காரணம்** 1 x 1 = 1

16) (அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

**பகுதி - அ - பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு** 1 x 1 = 1

17) (அ) வங்கியர்
**காரணம்:**
செலுத்தற்குரிய நாளை கணக்கிடும்போது, மாற்றுச்சீட்டின் தவணைக்காலம் முடிந்தபிறகு உள்ள மூன்று நாட்களைக் கூட்டிக்கொள்ள வேண்டும். அந்த மூன்று நாட்களுக்கு சலுகை நாட்கள் என்று பெயர் ஏனைய மூன்றும் மாற்றுச் சீட்டுடன் தொடர்புடைய நபர்கள் ஆவர்.

**பகுதி - அ - பொருத்தமான இணையை காண்க** 1 x 1 = 1

18) இ. மாற்றுச் சீட்டு - எழுத்து வடிவிலான ஆவணம்

**பகுதி - அ - பொருத்தமற்ற இணையை காண்க** 1 x 1 = 1

19) (ஈ) விற்பனை திருப்ப ஏடு - பற்று குறிப்பு எண்

**பகுதி - அ - சரியான வாக்கியத்தை காண்க** 1 x 1 = 1

20) (ஈ) I, II மற்றும் III சரி

**பகுதி - ஆ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாய வினா** 7 x 2 = 14

21) ஜே.ஆர்.பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்பா, "கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்."
ஆர்.என்.கார்டர் அவர்களின் கூற்றுப்பா "கணக்கேடுகள் பராமரிப்பு என்பது, பணம் அல்லது பணத்தின் மதிப்பிலுள்ள அணைத்து வணிகிய நடவடிக்கைகளையும் கணக்கேடுகளில் சரியாக பதிவு செய்யும் காலை மற்றும் அறிவியல் ஆகும்."

22)

| | சொத்துக்கள் ரூ= | பொறுப்புகள் ரூ= | முதல் ரூ |
|---|---|---|---|
| (அ) | 30,000 | 20,000 | **10,000** |
| (ஆ) | 60,000 | 25,000 | **35,000** |
| (இ) | **55,000** | 25,000 | 30,0000 |
| (ஈ) | **90,000** | 10,000 | 80,000 |
| (உ) | 25,000 | **10,000** | 15,000 |
| (ஊ) | 40,000 | **10,000** | 30,000 |

23)
அறைகலன் க/கு
ப வ

| நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ | நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 2016 ஜனவரி 1 | ரொக்கம் க/கு | | 2,000 | 2016 ஜனவரி 30 | ரொக்கக் க/கு | | 400 |
| 1 | ரொக்கக் க/கு | | 4,000 | 31 | இருப்பு கீ/இ | | 5,600 |
| | | | 6,000 | | | | 6,000 |
| பிப்ரவரி 1 | இருப்பு கீ/கொ | | 5,600 | | | | |

24) பற்றிருப்புகள்:
1. ரொக்கம், 2. அறைகலன், 3. கடனாளி, 4. கொள்முதல், 5. ஊதியம் வழங்கியது, 6. கணினி
வரவிருப்புகள்:
1. கடனீந்தோர், 2. விற்பனை, 3. கழிவு பெற்றது, 4. முதல்

25) (i) இருபாய்வு என்பது ஒரு குறிப்பிட்ட நாளில் அணைத்துப் பேரெடுக்க கணக்குகளில் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும்.
(ii) பற்று மற்றும் வரவு என்ற இரு பத்திகளை அருகருகே கொண்டு இது தயாரிக்கப்படுகிறது.

26) (i) வெளித்தூக்குக்கூலி - பற்று
(ii) உள்தூக்கு கூலி - பற்று
(iii) விற்பனை - வரவு
(iv) கொள்முதல் - பற்று
(v) வாராக்கடன் - பற்று
(vi) வட்டிச் செலுத்தியது - பற்று
(vii) வட்டிப் பெற்றது - வரவு
(viii) தள்ளுபடிப் பெற்றது - வரவு
(ix) முதல் - வரவு
(x) எடுப்புகள் - பற்று
(xi) விற்பனைத்திருப்பம் - பற்று
(xii) கொள்முதல் திருப்பம் - வரவு

27) 1. கொள்முதல் ஏடு
2. கொள்முதல் திருப்ப ஏடு
3. விற்பனை ஏடு
4. விற்பனைத் திருப்ப ஏடு

28)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

| நாள் | பெறுதல்கள் | இ.எண் | பே. ப.எண் | தொகை ரூ. | | நாள் | செலுத்தல்கள் | சா. சீ. எண் | பே. ப.எண் | தொகை ரூ. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தள்ளுபடி | ரொக்கம் | | | | | தள்ளுபடி | ரொக்கம் |
| | | | | | | | | | | | |

29) 1. பொருளை அளிப்பவர், அப்பொருளை வாங்கியவருக்கு பட்டியல் விலையில் குறைதல் அல்லது விலைபட்டியலில் உள்ள விலையைவிட குறைவாக வழங்கினால் அதுவே வியாபாரத் தள்ளுபடி ஆகும்.
2. இது வியாபார வழக்கப்படி அல்லது வாங்குபவர் அதிக எண்ணிக்கையில் பொருட்களை வாங்கும்போது அளிக்கப்படுகிறது. இத்தள்ளுபடி இடாப்பில் கழித்துக் காட்டப்படும்.

30) (1) வங்கிக் கணக்கில் உண்மையான இருப்புக்கு அதிகமாக எடுப்பு செய்யும்போது அவ்விருப்பினை இது குறிக்கின்றது.
(2) நடப்பு கணக்கு வைத்திருப்போருக்கு மட்டும் இத்தகைய வசதி அளிக்கப்படுகின்றது. இவ்வாறு அதிகப்படியாக எடுத்த தொகைக்கு வட்டி கணக்கிடப்படுகிறது.
(3) இத்தொகை ரொக்க ஏட்டில் வரவிருப்பாகவும் அதாவது பாதக இருப்பாகவும் செல்லேட்டில் பற்றிருப்பாகவும் காண்பிக்கப்படும்.

**பகுதி - இ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாய வினா** 7 x 3 = 21

31) **அ. முதலீட்டாளர்கள்:**
ஒரு நிறுவனத்தில் தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள், நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொண்டு தங்களது முதலீட்டு முடிவுகளை எடுக்கின்றனர். அழர்கள் நிறுவனத்தின் எதிர்கால இலாபம் மற்றும் இடர் ஏற்கும் திறன் போன்ற, தங்களது இலாபத்தை பாதிப்பவைகளில் அதிக ஆர்வம் கொண்டிருப்பார்.
**ஆ. அரசு:**
அரசாங்கம் வணிக நிறுவனங்களின் செயல் திறனை அறிந்து கொண்டு வணிகம் மற்றும் தொழில்துறைச் சார்ந்த கொள்கை முடிவுகளை உருவாக்குதல், மானியம் மற்றும் சலுகைகள் வழங்குதல் போன்றவற்றிற்கான முடிவுகளை எடுக்க உதவுகிறது. சில பொருட்களுக்கான விலைகளை அரசு நிர்ணயம் செய்யும் வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்யவும் உதவுகிறது.

32) ஆள்சார் கணக்கு:
ஆட்கள் சார்புடைய கணக்குகள் ஆள்சார் கணக்குகள் எனப்படும்.இது தனி நபர், சட்டமுறை அமைப்பு, பிரதி நிதித்துவ அமைப்பு எனப் பிரிக்கப்படுகிறது.
(a) தனிநபர் கணக்கு:
தனி மனிதர் சார்புடைய கணக்குகளாகும்.எ.கா: ரமேஷ் கணக்கு, ராதா கணக்கு.
(b) சட்டமுறை ஆள்சார் கணக்கு:
ஆட்களின் குழு அல்லது அமைப்பு அல்லது சங்கம் சார்புடைய கணக்குகளாகும்.
எ.கா: வங்கி க/கு HMT Ltd., க/கு காப்பீட்டுக் கழகம். கணக்கு போன்றவை.
(iii) பிரதிநிதித்துவ அமைப்பு
இது இயற்கை அல்லது செயற்கை தன்மையுடைய நபரையோ அல்லது குழுவையோ குறிக்கிறது.
எ.கா.: கொடுப்பட வேண்டிய சம்பளக் கணக்கு, முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு கணக்கு போன்றவை.

33) குறிப்பேட்டுப் பதிவுகள்
வினோத்தின் தொடக்க பதிவுகள்

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|---|
| 2018 | ரொக்கக் க/கு | ப | | 40,000 | |
| ஜனவரி | சரக்கிருப்பு க/கு | ப | | 50,000 | |
| 1 | ராம் க/கு | ப | | 20,000 | |
| | இயந்திரம் க/கு | ப | | 40,000 | |
| | விஜய் க/கு | | | | 10,000 |
| | வினோத் முதல் க/கு<br>(சென்ற ஆண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கணக்கில் கொண்டு வரப்பட்டது) | | | | 1,40,000 |

பேரேட்டுக் கணக்குகள் வினோத் முதல் க/கு
ப வ

| நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ | நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 2018 ஜனவரி 31 | இருப்பு கீ/இ | | 1,80,000 | 2018 ஜனவரி 1 | பற்பல சொத்துகள் க/கு | | 1,40,000 |
| | | | 1,40,000 | | | | 1,40,000 |
| | | | | பிப்ரவரி 1 | இருப்பு கீ/கொ | | 1,40,000 |

34) சரி செய்யப்பட்ட இருப்பாய்வு மார்ச் 31, 2017

| கணக்கின் பெயர் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| கட்டடம் | 60,000 | |
| இயந்திரம் | 17,000 | |
| கொள்முதல் திருப்பம் | | 2,600 |
| வாராக்கடன் | 2,000 | |
| ரொக்கம் | 400 | |
| பெற்றெற்றத் தள்ளுபடி | | 3,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | | 10,000 |
| கடனீந்தோர் | | 50,000 |
| கொள்முதல் | 1,00,000 | |
| முதல் | | 72,800 |
| பொருத்துகைகள் | 5,600 | |
| விற்பனை | | 1,04,000 |
| கடனாளிகள் | 60,000 | |
| வட்டி பெற்றெற்றது | | 2,600 |
| மொத்தம் | 2,45,000 | 2,45,000 |

35)

| | | |
|---|---|---|
| அ) | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | இந்த நடவடிக்கை விற்பனை ஏட்டில் பதியப்படுவதில்லை |
| ஆ) | கடனுக்கு சரக்கு வாங்கியது. | இந்த நடவடிக்கை கொள்முதல் ஏட்டில் பதியப்படுகிறது. |
| இ) | கடனுக்கு சரக்கு வாங்கியது | இந்த நடவடிக்கை கொள்முதல் ஏட்டில் பதியப்படுகிறது. |
| ஈ) | உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது. | இந்த நடவடிக்கை கொள்முதல் திருப்ப ஏட்டில் பதியப்படுகின்றன. |
| உ) | சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு. | இந்த நடவடிக்கை கொள்முதல் திருப்ப ஏட்டில் பதியப்படுகின்றன. |
| ஊ) | கடனுக்கு சொத்துகள் வாங்கியது | இந்த நடவடிக்கை கொள்முதல் ஏடுகளில் பதியப்படுவதில்லை |

36) (அ) மேலெழுதுதல்
(1) மாற்றுச்சீட்டின் உரிமையை வேறொருவருக்கு மாற்றித் தருவதற்காக, மாற்றுச்சீட்டின் முன்புறத்தில் அல்லது பின்புறத்தில் கையொப்பம் இடுவதை மேலெழுதுதல் என்பர்.
(2) மாற்றுச்சீட்டை இதற்கென மேலெழுதி மாற்றிக்கொடுப்பவர் மேலெழுதுநர் எனப்படுகிறார்.
(3) மாற்றுச்சீட்டு மேலெழுதி யாருக்கு கொடுக்கப்படுகிறதோ அவர் மேலெழுதப்பெறுநர் எனப்படுகிறார்.
(4) மேலெழுதப்பெறுநர் மாற்றுச்சீட்டுக்குரிய தொகையைப் பெறும் உரிமையைப் பெறுகிறார்.
(ஆ) தள்ளுபடி செய்தல்
(1) மாற்றுச்சீட்டை வைத்துள்ளவர் அதன் முதிர்வுக்கு முன்பே பணம் பெற விரும்பினால், அதனை வங்கியில் தள்ளுபடி செய்து ரொக்கம் பெறலாம். இம்முறைக்கு மாற்றுச்சீட்டினைத் தள்ளுபடி செய்தல் என்று பெயர்.
(2) இதற்காக, வங்கியர் ஒரு சிறு தொகையைத் தள்ளுபடியாகப் பெற்றுக் கொள்வார். மீதமுள்ள தொகையினை உடனடியாக கொடுத்து விடுவார்.

37)

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகள் பின்வருமாறு

| வ.எண் | அடிப்படை | ரொக்கத் தள்ளுபடி | வியாபாரத் தள்ளுபடி |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு ரொக்கத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில் பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக வியாபாரத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. |
| 2 | வழங்கப்படும் காலம் | ரொக்கத் தள்ளுபடி வுற்றவர் அல்லது கடனீந்தோரால் வாங்கியவர் அல்லது கடனளிக்கு தொகையை திரும்ப செலுத்தும்போது வழங்கப்படுகிறது. | வியாபாரத் தள்ளுபடி விற்றவரால் வாங்கியவருக்கு பொருட்களை விற்கும்போது வழங்கப்படுகிறது. |
| 3 | தள்ளுபடி தொகை | ரொக்கத் தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாக கொண்டது. | வியாபார ட்டிஹல்லுபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாக கொண்டது. |
| 4 | கணக்கேடுகளில் பதிவு செய்தல் | ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதியப்படுகிறது. | வியாபார தள்ளுபடி கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை |
| 5 | இடாப்பு மதிப்பில் கழித்து காட்டுதல் | ரொக்கதள்ளுபடி சரக்கின் இடாப்பு மதிப்பிலிருந்து கழித்து காட்டப்படமாட்டது. | வியாபார தள்ளுபடி பட்டியல் விலையிலிருந்து கழித்துக் காட்டப்படும். |

38) குணால் என்பவரின் ஏடுகளில்

ப த னிப்பத்தி ரொக்க ஏடு வ

| நாள் | பெறுதல்கள் | பே.ப.எ. | தொகை ரூ | நாள் | செலுத்தல்கள் | பே.ப.எ. | தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 | | | | 2017 | | | |
| ஜன 1 | இருப்பு கீ/கொ | | 11,200 | ஜன 7 | வாடகை க/கு | | 30 |
| ஜன | இரமேஷ் க/கு | | 300 | ஜன | மோகன் க/கு | | 700 |
| ஜன | விற்பனை க/கு | | 300 | ஜன | அறைகலன் க/கு | | 200 |
| | | | | ஜன | சம்பளம் க/கு | | 100 |
| | | | | ஜன | இருப்பு கீ/இ | | 10,770 |
| | | | 11,800 | | | | 11,800 |
| பிப் 1 | இருப்பு கீ/கொ | | 10,770 | | | | |

39)

டிசம்பர் 31, 2017-ம் நாளன்றைய வங்கிச் சரிக்கட்டும் பட்டியல்

| விவரம் | ரூ | ரூ |
|---|---|---|
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 25,000 |
| கூட்டுக: காசோலை மறுக்கப்பட்டது | 250 | |
| செலுத்திய காசோலை இன்னும் வசூலிக்கப்படவில்லை | 3,500 | |
| வங்கிக் கட்டணம்ரொக்க ஏட்டில் பதியப்படவில் | 300 | 4,050 |
| | | 29,050 |
| கழிக்க: விடுத்த காசோலை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை | | 9,000 |
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 20,050 |

40)

| | | |
|---|---|---|
| ரொக்க ஏட்டின்படி வங்கியிருப்பு | | 15,000 |
| கூட்டுக: | | |
| காசோலை விடுத்தும் பணமாக்கப்படாதவை | 1,500 | |
| வங்கி வரவு வைத்த வட்டி | 200 | |
| | | 1,700 |
| | | 16,700 |
| கழிக்க: | | |
| வங்கியில் செலுத்தியும் வசூல் ஆகாத காசோலை | 1,000 | |
| | | 1,000 |
| வங்கி அறிக்கையின்படி வங்கியிருப்பு | | 15,700 |

**பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a)

| வ.எண். | நடவடிக்கை | ரொக்கம் ரூ | வங்கி ரூ | சரக்கிருப்பு ரூ | அறைகலன்கள் ரூ | மொத்த சொத்துக்கள் ரூ | = | மொத்த பொறுப்புகள் ரூ | முதல் ரூ | கடனீந்தோர் ரூ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | +40,000 | | | | | | | +40,000 | |
| | இருப்புகள் | +40,000 | | | | | | | +40,000 | |
| | **சமன்பாடு** | | | | | **+40,000** | = | **+40,000** | | |
| ஆ) | வங்கியில் செலுத்திய ரொக்கம் | -30,000 | +30,000 | | | | | | | |
| | இருப்புகள் | +10,000 | +30,000 | | | | | | +40,000 | |
| | **சமன்பாடு** | | | | | **+40,000** | = | **+40,000** | | |
| இ) | கடனுக்கு சரக்கு வாங்கியது | | | +12,000 | | | | | | +12,000 |
| | இருப்புகள் | +10,000 | +30,000 | +12,000 | | | | | +40,000 | +12,000 |
| | **சமன்பாடு** | | | | | **+52,000** | = | **+52,000** | | |
| ஈ) | சொந்த பயனுக்கு ரொக்கம் எடுத்தது | -1,000 | | | | | | | -1,000 | |
| | இருப்புகள் | +9,000 | +30,000 | +12,000 | | | | | +39,000 | +12,000 |
| | **சமன்பாடு** | | | | | **+51,000** | = | **+51,000** | | |
| உ) | பற்று அட்டையைப் பயன்படுத்தி அறைகலன் வாங்கியது | | -10,000 | | +10,000 | | | | | |
| | இருப்புகள் | +9,000 | +20,000 | +12,000 | +10,000 | | | | +39,000 | +12,000 |
| | **சமன்பாடு** | | | | | **+51,000** | = | **+51,000** | | |
| ஊ) | ரொக்கம் பெறப்பட்டது | +6,000 | | | | | | | +6,000 | |
| | இருப்புகள் | +15,000 | +20,000 | +12,000 | +10,000 | | | | +45,000 | +12,000 |
| | **சமன்பாடு** | | | | | **+57,000** | = | **+57,000** | | |
| எ) | அலுவலகச் செலவுக்காக ரொக்கம் எடுத்தது | +1,000 | -1,000 | | | | | | | |
| | இருப்புகள் | +16,000 | +19,000 | +12,000 | +10,000 | | | | +45,000 | +12,000 |
| | **சமன்பாடு** | | | | | **+57,000** | = | **+57,000** | | |

**(OR)**

b)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப.எண் | தொகை (ரூ) விளக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப்ரல் 1 | பிரசாத் | | | | |
| | 100 மீட்டர் சில்க் துணி ரூ.450 வீதம் | | | 45,000 | |
| | 75 மீட்டர் வெல்வெட் துணி ரூ.180 வீதம் | | | 13,500 | 58,500 |
| ஏப் 18 | நாதன் நிறுவனம் | | | | |
| | 100 மீட்டர் சில்க் துணி ரூ.510 வீதம் | | | | 51,000 |
| ஏப் 20 | ஹரிராம் | | | | |
| | 50 கட்டுகள் காடாத் துணி ரூ.730 வீதம் | | | 36,500 | |
| | 80 கட்டுகள் காலிக்கோ துணி ரூ.650 வீதம் | | | 52,000 | 88,500 |
| | கொள்முதல் க/கு ப | | | | 1,98,000 |

சந்தோஷ் ஆடையகத்தின் விற்பனை ஏடு

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப.எண் | தொகை (ரூ) விளக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 10 | இரத்தினம் | | | | |
| | 60 மீட்டர் சில்க் துணி ரூ.490 வீதம் | | | 29,400 | |
| | 50 மீட்டர் வெல்வெட் துணி ரூ.210 வீதம் | | | 10,500 | |
| | விற்பனை க/கு வ | | | | 39,900 |

42) a)

மனோகர் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|---|
| 2018 மார்ச் 1 | ரொக்க க/கு | ப | | 60,000 | |
| | மனோகர் முதல் க/கு | | | | 60,000 |
| | (மனோகர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது) | | | | |
| 2 | அறைகலன் க/கு | ப | | 10,000 | |
| | ரொக்கக் க/கு | | | | 10,000 |
| | (ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது) | | | | |
| 3 | கொள்முதல் க/கு | ப | | 25,000 | |
| | ரொக்கக் க/கு | | | | 25,000 |
| | (ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது) | | | | |
| 6 | கொள்முதல் க/கு | ப | | 15,000 | |
| | கமலேசு க/கு | | | | 15,000 |
| | (கடனுக்கு கொள்முதல் செய்தது) | | | | |
| 8 | ரொக்க க/கு | ப | | 28,000 | |
| | விற்பனை க/கு | | | | 28,000 |
| | (ரொக்கத்திற்கு விற்பனை செய்தது) | | | | |
| 10 | ஹரி க/கு | ப | | 10,000 | |
| | விற்பனை க/கு | | | | 10,000 |
| | (கடனுக்கு விற்பனை செய்தது) | | | | |
| 14 | காமலேசு க/கு | ப | | 12,000 | |
| | ரொக்க க/கு | | | | 12,000 |
| | (காமலேசுக்கு செலுத்தியது) | | | | |
| 18 | வாடகை க/கு | ப | | 500 | |
| | ரொக்கக் க/கு | | | | 500 |
| | (வாடகை செலுத்தியது) | | | | |
| 25 | ரொக்க க/கு | ப | | 8,000 | |
| | ஹரி க/கு | | | | 8,000 |
| | (ஹரியிடமிருந்து ரொக்கம் பெற்றது) | | | | |
| 28 | எடுப்புகள் க/கு | ப | | 4,000 | |
| | ரொக்கக் க/கு | | | | 4,000 |
| | (சொந்தப்பயனுக்கு ரொக்கம் எடுத்தது) | | | | |

**(OR)**

b)

சரிக்கட்டப்பட்ட இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப.எண் | பற்று இருப்பு ரூ. | வரவு இருப்பு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | தொடக்கச் சரக்கிருப்பு | | 1,00,000 | |
| 2 | சம்பளம் | | 36,000 | |
| 3. | கடனீந்தோர் | | | 1,32,000 |
| 4. | வங்கி | | 35,000 | |
| 5. | உள் ஏற்றிச் செல் செலவு | | 18,000 | |
| 6. | பெற்ற வாடகை | | | 9,000 |
| 7. | அளித்த தள்ளுபடி | | 6,000 | |
| 8. | கொள்முதல் | | 3,48,000 | |
| 9. | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | | 60,000 |
| 10. | கடனாளிகள் | | 45,000 | |
| 11. | வெளித்தூக்குக் கூலி | | 15,000 | |
| 12. | முதல் | | | 1,63,000 |
| 13. | உள்திருப்பம் | | 9,000 | |
| 14. | பெற்ற தள்ளுபடி | | | 12,000 |
| 15. | வியாபாரச் செலவுகள் | | 18,000 | |
| 16. | விற்பனை | | | 3,68,000 |
| 17. | கட்டடம் | | 1,14,000 | |
| | மொத்தம் | | 7,44,000 | 7,44,000 |

43) a)

தீபக்கின் ஏடுகளில்

| நாள் | விவரம் | | பே.ப.எ | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|---|
| 2018 ஜனவரி 1 | ரொக்கக் க/கு<br>தீபக் முதல் க/கு<br>(தீபக் முதல் போட்டது) | ப | | 2,00,000 | 2,00,000 |
| 2 | வங்கி க/கு<br>ரொக்கக் க/கு<br>(வங்கியில் பணம் செலுத்தியது) | ப | | 1,00,000 | 1,00,000 |
| 3 | பத்மினி நிறுவனக் க/கு<br>விற்பனை க/கு<br>(பத்மினி நிறுவனத்திற்கு கடன் விற்பனை செய்தது) | ப | | 60,000 | 60,000 |
| 4 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு<br>பத்மினி நிறுவனக் க/கு<br>(வரவேண்டிய தொகைக்கு பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு பெற்றது) | ப | | 60,000 | 60,000 |
| 5 | வங்கி க/கு<br>தள்ளுபடி க/கு<br>பெறுதற்குரிய மாற்றுச் சீட் டு<br>(மாற்றுச்சீட் டு வங்கியில் தள்ளுபடி செய்து பணம் பெறப்பட்டது) | ப<br>ப | | 58,000<br>2,000 | 60,000 |
| பிப்ரவரி 15 | பத்மினி நிறுவனக் க/கு<br>வங்கி க/கு<br>(தள்ளுபடி செய்யப்பட்ட பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு மறுக்கப்பட்டது) | ப | | 60,000 | 60,000 |

**(OR)**

b)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

ப கல்யாண சுந்தரம் என்பவரது ஏடுகளில் முப்பத்தி ரொக்க ஏடு வ

| நாள் | பெறுதல்கள் | இ. எண் | பே. ப. எண் | தொகை ரூ அளித்த தள்ளுபடி | ரொக்கம் | வங்கி | நாள் | செலுத்தல்கள் | சா.சீ. எண் | பே. ப. எண் | தொகை ரூ பெற்ற தள்ளுபடி | ரொக்கம் | வங்கி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | | | 42,500 | 35,000 | 2017 ஜன 4 | வங்கி க/கு | | | | 11,500 | |
| 3 | விற்பனை க/கு | | | | 15,700 | | 6 | கொள்முதல் க/கு | | | | 14,300 | |
| 4 | ரொக்க க/கு | | 'எ' | | | 11,500 | 10 | பொங்கல் முன்பணம் | | | | | 17,000 |
| 9 | பங்காதாயம் பெற்றது | | | | | 2,000 | 17 | மகேஷ் க/கு | | | 300 | 19,700 | |
| 12 | நாகராஜன் க/கு | | | 150 | 11,850 | | 20 | எடுப்புகள் க/கு | | | | 20,000 | |
| 30 | வங்கு க/கு | | | | 1,500 | | 30 | ரொக்க க/கு | | | | | 1,050 |
| | | | | | | | 31 | இருப்பு க/கு | | | | 6,050 | 30,000 |
| | | | | 150 | 71,550 | 48,500 | | | | | 300 | 71,550 | 48,500 |
| பிப் 1 | | | | | 6,050 | 30,000 | | | | | | | |

44) a)

ரொக்கக் கணக்கு

| நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. | நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | 45,000 | | | | |

சரக்கிருப்பு கணக்கு

| நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. | நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | 50,000 | | | | | |

சோகன் கணக்கு

| நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. | நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | 35,000 | | | | | |

அறைகலன் கணக்கு

| நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. | நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | 50,000 | | | | | |

ராம் கணக்கு

| நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. | நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | 20,000 |

ஜாயின் கணக்கு

| நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. | நாள் | விவரம் | கு.ப.எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | 1,60,000 |

**(OR)**

b)

ப பாகுடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏடு வ

| பெற்ற தொகை | ரொ.ஏ.ப.எ. | நாள் | விவரம் | சா. சீ. எ. | மொத்தம் செலவழித்த தொகை | பயணச் செலவுகள் | வண்டிக் கட்டணம் | அஞ்சல் செலவு | கூலி | எழுது பொருள் | பல்வகைச் செலவுகள் | போ. எ. எ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 500 | | 2017 ஜன1 | ரொக்கம் | | | | | | | | | |
| | | 2 | பயணச் செலவு | | 5 | 5 | | | | | | |
| | | | வண்டிக் கட்டணம் | | 12 | | 12 | | | | | |
| | | 3 | அஞ்சல் செலவு | | 15 | | | 15 | | | | |
| | | | கூலி | | 66 | | | | 66 | | | |
| | | 4 | எழுது பொருள் | | 134 | | | | | 134 | | |
| | | | போக்குவரத்துச் செலவுகள் | | 18 | 18 | | | | | | |
| | | 5 | பழுதுபார்ப்புச் செலவு | | 65 | | | | | | | |
| | | | பயணச் செலவுகள் | | 11 | 11 | | | | | 65 | |
| | | | வண்டிக் கட்டணம் | | 24 | | 24 | | | | | |
| | | | மொத்தச் செலவுகள் | | 350 | 34 | 36 | 15 | 66 | 134 | 65 | |
| | | 5 | இருப்பு கீ/இ | | 150 | | | | | | | |
| 500 | | | | | 500 | | | | | | | |
| 150 | | ஜன6 | இருப்பு கீ/கொ | | | | | | | | | |
| 350 | | 6 | ரொக்கக் க/கு | | | | | | | | | |

45) a)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|---|
| 2016 | ரொக்கக் க/கு | ப | | 10,000 | |
| ஜன.1 | முதல் க/கு (ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது) | | | | 10,000 |
| 5 | வங்கி க/கு | ப | | 5,000 | |
| | ரொக்கக் க/கு (வங்கியில் செலுத்தியது) | | | | 5,000 |
| 7 | கொள்முதல் க/கு | ப | | 1,000 | |
| | ரொக்கக் க/கு (ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது) | ப | | | 1,000 |

பேரேட்டுக் கணக்குகள்

ரொக்கக் க/கு

ப வ

| நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ | நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 2016 ஜனவரி 1 | முதல் க/கு | | 10,000 | 2016 ஜனவரி 5 | வங்கி க/கு | | 5,000 |
| | | | | 7 | கொள்முதல் க/கு | | 1,000 |
| | | | | 31 | இருப்பு கீ/இ | | 4,000 |
| | | | 10,000 | | | | 10,000 |
| 2016 பிப்ரவரி 1 | இருப்பு கீ/கொ | | 4,000 | | | | |

வங்கி க/கு

ப வ

| நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ | நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 2016 ஜனவரி 5 | ரொக்கக் க/கு | | 5,000 | 2016 ஜனவரி 31 | இருப்பு கீ/இ | | 5,000 |
| | | | 5,000 | | | | 5,000 |
| 2016 பிப்ரவரி 1 | இருப்பு கீ/கொ | | 5,000 | | | | |

முதல் க/கு

ப வ

| நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ | நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 2016 ஜனவரி 31 | இருப்பு கீ/இ | | 10,000 | 2016 ஜனவரி 1 | ரொக்கக் க/கு | | 10,000 |
| | | | 10,000 | | | | 10,000 |
| | | | | 2016 பிப்ரவரி 1 | இருப்பு கீ/கொ | | 10,000 |

கொள்முதல் க/கு

ப வ

| நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ | நாள் | விவரம் | கு.ப.எண் | ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 2016 ஜனவரி 7 | ரொக்கக் க/கு | | 1,000 | 2016 ஜனவரி 31 | இருப்பு கீ/இ | | 1,000 |
| | | | 1,000 | | | | 1,000 |
| 2016 பிப்ரவரி 1 | இருப்பு கீ/கொ | | 1,000 | | | | |

**(OR)**

b)

குமார் என்பவரது ஏடுகளில் 2016 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியல்

| விவரம் | தொகை ரூ | தொகை ரூ |
|---|---|---|
| ரொக்க ஏட்டின்படி இருப்பு | | 7,130 |
| **கூட்டுக:** | | |
| வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது | | 800 |
| | | 7,930 |
| **கழிக்க:** | | |
| செலுத்திய காசோலை வசூலாகிறது | | 1,000 |
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 6,930 |

46) a)

இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப.எண் | பற்று இருப்பு ரூ. | வரவு இருப்பு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | கொள்முதல் | | 1,00,000 | |
| 2. | வங்கிக் கடன் | | | 75,000 |
| 3. | கடனாளி | | 1,50,000 | |
| 4. | சரக்கிருப்பு | | 35,000 | |
| 5. | விற்பனை | | | 1,50,000 |
| 6. | கடனீந்தோர் | | | 50,000 |
| 7. | ரொக்கம் | | 90,000 | |
| 8. | முதல் | | | 1,00,000 |
| | மொத்தம் | | 3,75,000 | 3,75,000 |

**(OR)**

b)

ப அகமது என்பவரது ஏடுகளில் இருபத்தி ரொக்க ஏடு (ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடையது ) வ

| நாள் | பெறுதல்கள் | இ. எண் | பே.ப எண் | தொகை ரூ தள்ளுபடி | தொகை ரூ ரொக்கம் | நாள் | பெறுதல்கள் | சா.சீ. எண் | பே.ப. எண் | தொகை ரூ தள்ளுபடி | தொகை ரூ ரொக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2017 அக் 1 | இருப்பு கீ/கொ | | | | 37,500 | 2017 அக் 7 | வேலன் க/கு | | | 150 | 15,850 |
| 3 | விற்பனை க/கு | | | | 33,000 | 15 | எடுப்புகள் க/கு | | | | 4,800 |
| 25 | பெருமாள் க/கு | | | 200 | 19,000 | 22 | வங்கி க/கு | | | | 22,700 |
| 26 | வங்கி க/கு | | | | 17,500 | 27 | கோபால கிருஷ்ணன் க/கு | | | 50 | 2,950 |
| | | | | | | 28 | சுப்ரமணியன் க/கு | | | 100 | 14,200 |
| | | | | | 200 | 29 | கொள்முதல் க/கு | | | | 13,500 |
| | | | | | | 30 | விளம்பரச் செலவுகள் க/கு | | | | 1,500 |
| | | | | | | 31 | இருப்பு கீ/இ | | | | 31,500 |
| நவ 1 | இருப்பு கீ/கொ | | | 200 | 1,07,000 | | | | | 300 | 1,07,000 |
| | | | | | 31,500 | | | | | | |

47) a)



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

சுபஸ்ரீ மின்பொருள் நிறுவனத்தின் ஏடுகளில் கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப.எண் | தொகை (ரூ) | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் | மொத்தம் |
| 2017 ஏப்ரல் 5 | கார்த்திக் மின்பொருள் நிறுவனம்<br>10 மின் தேய்ப்பான் ஒன்று ரூ.2500 வீதம் | | 25,000 | | |
| | 5 மின்சார அடுப்புகள் ஒன்று ரூ.2000 வீதம் | | 10,000 | | 35,000 |
| ஏப் 19 | கேதான் மின்பொருளகம்,<br>3மின்சார நீர் சூடேற்றி ஒன்று ரூ.6,000 வீதம் | | | | 18,000 |
| ஏப் 25 | போலார் மின் பொருள் விற்பனையகம்<br>10 மின் விசிறிகள் ஒன்று ரூ.2000 வீதம் | | | | 20,000 |
| | கொள்முதல் க/கு ப | | | | 73,000 |

**(OR)**

b)

ப சேஷாத்ரி என்பவரது ஏடுகளில் தனிப்பத்தி ரொக்க ஏடு வ

| நாள் | பெறுதல்கள் | இ. எண் | பே.ப. எண் | தொகை ( ரூ ) | நாள் | செலுத்தல்கள் | சா.ப. எண் | பே.ப. எண் | தொகை ( ரூ ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2017 மே 1 | இருப்பு கீ/கொ | | | 40,000 | 2017 மே 7 | கூலி க/கு | | | 2,000 |
| 5 | ஸ்வாதி க/கு | | | 4,000 | 10 | கொள்முதல் க/கு | | | 6,000 |
| 15 | விற்பனை க/கு | | | 9,000 | 18 | கணிப்பொறி க/கு | | | 15,000 |
| 30 | வட்டி க/கு | | | 500 | 22 | சபாபதி க/கு | | | 5,000 |
| | | | | | 28 | சம்பளம் க/கு | | | 2,500 |
| | | | | | 31 | இருப்பு கீ/இ | | | 23,000 |
| | | | | 53,500 | | | | | 53,500 |
| ஜூன் 1 | இருப்பு கீ/கொ | | | 23,000 | | | | | |

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593